செ.கு.எண் :- 113.　　　　　　　　　　　நாள் :- 22.03.12

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## "யுகாதி தின" வாழ்த்துச் செய்தி

தமிழகத்தில் வாழும் தெலுங்கு மற்றும் கன்னட மொழி பேசும் மக்கள் அனைவருக்கும் "யுகாதி" திருநாளில் என் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெலுங்கு மற்றும் கன்னட மக்கள் தாங்கள் பேசும் மொழி வேறுபட்டிருந்தாலும் வாழும் இடம் ஒன்று என்ற உணர்வுடன் தமிழகத்தில், பல நூறு ஆண்டுகளாய் ஒருமித்து வாழ்ந்து வருவதும், ஒருவரோடு ஒருவர் நல்லுறவைப் பேணி, ஒற்றுமையுடன் வாழ்ந்து வரும் செயல் – தமிழ் மண்ணுக்கும், தமிழ் மக்களுக்கும் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

தமிழ் மக்களோடு இணைந்து சகோதர, சகோதரிகளாய், தூய சொந்தங்களாய் இனிதே வாழ்ந்து வரும் தெலுங்கு மக்களுக்கும், கன்னட மக்களுக்கும் புத்தாண்டுத் திருநாளாம் இந்த யுகாதி திருநாளில்,

வருங்காலம் யாவும் வளம் பெறுக !

வாழ்க்கையில் என்றும் வசந்தம் வீசுக !

என்று கூறி, என் இனிய நல்வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு:-

இயக்குனர், செய்தி மக்கள் தொடர்புத் துறை.
தலைமைச் செயலகம், சென்னை.